# ஹதீஸ்களும் அதன் வகைகளும்

Moulavi M.M. Zaky B.A. (Hons)

## பகுதி : 3

ஆகவே, பலவீனமான ஹதீஸ்களை அமுல் படுத்துவது தொடர்பாக அறிஞர்கள் மத்தியில் மூன்று கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை:

A. பலவீனமான ஹதீஸ்கள் பொதுவாக அமுல் படுத்தப்படும். அதாவது ஹலால் , ஹராம் தொடர்பான விவகாரங்களிலும் பர்ழு , வாஜிபு போன்ற விடயங்களிலும் ஆதார பூர்வமான செய்திகள் கிடைக்காவிட்டால் பலவீனமான ஹதீஸ்களை அமுல்படுத்தலாம். இது இமாம் அஹ்மத் (ரஹ்), அபூதாவூத் (ரஹ்) ,நஸாஈ (ரஹ்) ஆகியோரின் கருத்தாகும்.

   பகுத்தறிவு மற்றும் கியாஸ் (நேர்காணல்) ஆகிய அடிப்படைகளைவிட, பலவீனமான ஹதீஸ்களுக்கு இவர்கள் முன்னுரிமை கொடுப்பர். இந்த அடிப்படையில் இவர்கள் பலவீனமான ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். இதனால் தான் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள், "மனிதனுடைய பகுத்தறிவை விட பலவீனமான ஹதீஸ் எனக்கு மிக விருப்பமானது" என்று கூறுகின்றார். ஒரு பலவீனமான ஹதீஸ் கூடக் கிடைக்காத சந்தர்ப்பத்திலேயன்றி கியால் மற்றும் பகுத்தறிவின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்க இமாம் அஹ்மத் (ரஹ்) முற்படவில்லை.

B. அமல்களின் சிறப்புக்கள் தொடர்பான விவகாரங்களில் பலவீனமான ஹதீஸ்களை அமுல்படுத்துவது விரும்பத்தக்கதாகும். இது பெரும்பான்மையான ஹதீஸ்கலை, சட்டக்கலை அறிஞர்களுடைய கருத்தாகும். இது பிற்பட்ட கால அறிஞர்கள் மத்தியில் ஏகோபித்த முடிவும் கூட என்று இமாம்களான நவவி (ரஹ்), முல்லா அலீ அல்காரீ (ரஹ்), இப்னு ஹஜர் அல்ஹைதமீ (ரஹ்) போன்றோர் கூறுகின்றனர். இவ்வாறு பலவீனமான ஹதீஸ்களை அமுல்படுத்துவதற்கு 4 நிபந்தனைகள் உண்டு என்று கூறுவர்: அவையாவன:

1. அந்த ஹதீஸில் காணப்படுகின்ற பலவீனம் மிகக் கடுமையான தாக இருக்கக் கூடாது.

2. பலவீனமான ஹதீஸ் வலியுறுத்தவருகின்ற செய்தி சரீஅத்தின் வேறு ஆதாரங்களின் அடிப்படையிலோ பொதுவிதிகளின் அடிப்படையிலோ உறுதிப்படுத்தப்பட்டதாக இருத்தல்.
3. நபி (ஸல்) அவர்கள் அமுல்படுத்தினார்கள் என்ற நம்பிக்கையுடன் , பலவீனமான ஹதீஸ்களை அமுல் செய்யலாகாது.
4. இதனை விடப்பலம் கூடிய ஒரு ஆதாரத்துடன் பலவீனமான ஹதீஸ் முரண்படக் கூடாது.

பலவீனமான செய்திகளை அமுல் செய்வது விரும்பத்தக்கது என்று கூறும் அறிஞர்கள், அதற்கு முன்வைக்கின்ற நிபந்தனைகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்து பார்த்தால், அவற்றை அமுல் செய்வதில் எந்த நன்மையும் பலனும் இல்லை என்பது தெளிவாகின்றது.

C. சரீஅத் சட்டங்கள் மற்றும் சிறப்புக்கள் சார்ந்த எந்த விவகாரத்திலும் பலவீனமான ஹதீஸ்களை அமுல் செய்யக் கூடாது.

இது இமாம் இப்னுல் அரபீ (ரஹ்), அஷ்ஷிஹாப் அல் கபாஜீ (ரஹ்), அல்ஜலால் அத்தவ்வானீ (ரஹ்) ஆகிய அறிஞர்களதும், பெரும்பான்மையான சமகால அறிஞர்களதும் கருத்தாகும்.

இவ்வாறு பலவீனமான ஹதீஸ்களில் 381 வகைகள் இருப்பதாகச் சில அறிஞர்கள் கூறுகின்றனர்,42 வகைகள் இருப்பதாக இமாம் இப்னுஸ்ஸலாஹ் (ரஹ்) மற்றும் ஹாபிள் அல் இராகீ (ரஹ்) ஆகியோரும் கருதுவர். இந்த வகையில், பலவீனமான ஹதீல்களை இணங்கான்பதென்பது இலகுவான விடயமன்று. ஏனெனில் ஹதீஸ்களில் காணப்படுகின்ற பலவீனம் பலவகைப்படும், அவை வருமாறு:

1) அறிவிப்பாளர் தொடர்வரிசை மாத்திரம் பலவீனமானது (ஹதீஸின் மூலம் நீங்கலாக)
2) ஹதீஸின் மூலம் பலவீனமானது (அறிவிப்பாளர் தொர்வரிசை நீங்கலாக)
3) ஒரே நேரத்தில் – அறிவிப்பாளர் தொடரும் ஹதீஸின் மூலம் – இரண்டும் பலவீனமானது.
4) பல அறிவிப்பாளர் தொடர் வரிசைகளினூடாக இடம்பெற்றிருக்கின்ற குறிப்பிட்டதொரு நபி மொழி, அவற்றில் ஒரு அறிவிப்பாளர் தொடர் மட்டும் பலவீனமானதாக இருத்தல்.

ஆகவே, ஒரு ஹதீஸ் ஆதாரபூர்மானதா பலவீனமானதா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஹதீஸ்கலை சார்ந்த ஆழ்ந்த ஞானம் ஒருவரிடம் காணப்பட வேண்டும். ஏனெனில், ஹதீஸ் கலையில் ஆழ்ந்த ஞானம் மிக்கதொரு அறிஞர், ஒரு நபி மொழி குறித்து, இது பலவீனமானது என்று தீர்ப்புக் கூறியிருந்தால் மாத்திரமே இந்த நபி மொழியின் மூலம் மற்றும் அறிவிப்பாளர் தொடர் இரண்டுமே பலவீனமானது எனக் கருதப்படும். மாறாக ஹதீஸ்கலையில் ஆழ்ந்த ஞானம் கொண்டிராத ஒருவர் ஒரு நபி மொழிகுறித்து இது பலவீனமானது என்று கூறினால், இதன் அறிவிப்பாளர் தொடர்வரிசை மாத்திரம் பலவீனமானது என்றே கருதவேணடும்.

சட்டத்துறையில் புதிதாகத் தோன்றுகின்ற பிரச்சினைகளுக்கு ஆய்வு செய்து முடிவெடுக்கின்ற இஜ்திஹாத் எனும் பணி தொடர்வது போலவே ஹதீஸ்களுடைய அறிவிப்பாளர் தொடர்வரிசை, மூலம் போன்றவற்றை ஆய்வு செய்து இவை ஆதாரபூர்வமானவையா பலவீனமானவையா என்பதை தீர்மானிக்கின்ற பணியும் தொடர்கின்றது. ஆனால், இப்பணியில் ஈடுபடுவோரிடம் சில நிபந்தனைகளும், தகைமைகளும் காணப்பட வேண்டும் என்பது அறிஞர்கள் மத்தியில் ஏகோபித்த முடிவாகும்.

ஆனால், இன்று எந்த நிபந்தனைகளுக்கும் உட்படாத, ஹதீஸ்கலைபற்றிய ஞானமற்ற பலர் ஹதீஸ்களைத் தரப்படுத்தவும் அவற்றை விமர்சிக்கவும் துணிந்துவிட்டனர். இந்த அசட்டுத் தனமான துணிச்சலும், பலவீனமான ஹதீஸ்களை எந்த நிபந்தனையுமின்றி அமுல் செய்ய முற்படுவதும் சமமான செயற்பாடுகளாகும்.

ஆகவே, பலவீனமான ஹதீஸ்களை அமுல் செய்கின்ற விடயத்திலும், அவசரப்பட்டு ஹதீஸ்களுக்கு தீர்ப்புக் கூறுகின்ற விடயத்திலும் இஸ்லாமிய அழைப்பாளர்கள் மிக நிதானமாகவும், எச்சரிக்கையாகவும் இருந்திடவேண்டும். நம் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக.